# இறுதி அழைப்பு

இளம் தலைமுறையினரைச் சந்திக்க

இறுதி அழைப்பின் ஊழியங்களின் (CCM) செய்திமடல் | மலர் 2 | இதழ் 1 | ஜனவரி 2025


### தரிசன அறிக்கை

வாலிபரை கிறிஸ்துவிடம் நடத்தி, கிறிஸ்துவில் அவர்தம் தனித்துவ அழைப்பை நிறைவேற்ற அவர்களை வழிநடத்துவதே எமது தரிசனம்!

### செயல் அறிக்கை

இளம் தலைமுறையினரைச் சந்திக்க வாலிபர் கூடுகைகளை ஒழுங்குசெய்து, வெவ்வேறு நிலைகளில் அவர்களுக்கு ஆலோசனை உதவிகளைத் தந்து அவர்களைச் செயல்வீரர்களாய் உருவாக்குவதே எமது செயல் திட்டமாகும்.

### முக்கியக் கோட்பாடுகள்

1. தேவனுடன் நெருங்கிய ஐக்கியம்
2. பரிசுத்தம்
3. வசன – ஆவி சமநிலை
4. தனித்துவ அழைப்பு
5. தேவநாம மகிமை
6. பாடுகளைச் சகித்தல்
7. பண பரிவர்த்தனையில் உண்மை
8. ஒருவரையொருவர் சார்ந்திருத்தல்
9. குடும்பச் சூழல்
10. பணிவிடை தலைமைத்துவம்

"ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி...
...இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட
இருக்கிறேன் என்றார்..." (மத் 28:19,20).

## தேசிய ஒருங்கிணைப்பாளரிடமிருந்து...

அன்பான கிறிஸ்துவின் பணியில் உடன் ஊழியர்களுக்கு...

*2025ஆம் ஆண்டு உங்களுக்கு மகிழ்ச்சியான மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட புத்தாண்டாக அமைய வாழ்த்துக்கள்! அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம் (யோவா 1:16). கடந்து செல்லும் ஒவ்வொரு ஆண்டிலும் சவால்கள் அதிகரிக்கிறது. எப்படிக் கையாள்வோம் என்று திகைக்காமல், தேவனிடம் கிருபைக்காய் மன்றாடுவோம்.*

*இறுதி அழைப்பின் ஊழியங்கள் (CCM) தொடங்கப்பட்டு 9 மாதங்கள் கடந்துவிட்டன. இந்த 9 மாதங்களில் தேவன் செய்த காரியங்களைத் திரும்பிப் பார்க்கும்போது பிரம்மிக்கிறேன். திருநெல்வேலி (TN), கோயம்புத்தூர் (TN), ஹைதராபாத் (TG), ஜெய்ப்பூர் (OD) மற்றும் சாகர் (MP) ஆகிய இடங்களில் CCMஇன் தரிசன அறிமுகக் கூட்டங்களை நடத்தினோம். அதில் CCMஇன் தரிசனமும், அடுத்த தலைமுறையைச் சந்திக்க வேண்டிய பாரமும் சுமார் 380 பேருக்குக் கடத்தப்பட்டது. கோயம்புத்தூரில் நடைபெற்ற முதல் மிஷனரி தரிசனக் கூடுகையில் 260 பேர் சவால் பெற்றனர். 400 வாக்குறுதிகள் பெறப்பட்டன. தொடர்ந்து CCMஇன் மிஷனரிகளுக்காக ஒரு ஜெபக்கூடுகை நடத்தப்பட்டது. 18 பேர் கொண்ட மருத்துவக் குழு, பீகாரில் உள்ள GEMS பணித்தளங்களைப் பார்வையிட்டு மருத்துவ மிஷனரி பணியைக் குறித்த தெளிவைப் பெற்றனர்.*

*அஸ்ஸாம் (2), ஒடிசா (3), பஞ்சாப் (2) மற்றும் தமிழ்நாட்டில் (3) வாலிபர் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு 847 வாலிபர்கள் வார்த்தையிலும், ஆவியிலும் பலப்பட்டனர். பதின்ம வயதினருக்கான CCMஇன் முயற்சியாக "கூழாங்கற்கள்" என்ற முதல் முகாம் மகாபலிபுரத்தில் நடத்தப்பட்டது. 43 பதின்மர் பயன்பெற்றனர். அதன் பின்தொடர் பணியாகச் சென்னையில் மாதந்தோறும் கூழாங்கற்கள் கூடுகை நடத்தப்படுகிறது. CCMஇன் முதல் இலக்கு மையம் ஹைதராபாத்தில் (தெலுங்கானா) அர்ப்பணிக்கப்பட்டு பல மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. குண்டூரில் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் இயேசுவின் நற்செய்தியில் ஆசீர்வதிக்கப்படுகின்றனர். உத்திரப்பிரதேசத்தில் 3 இடங்களில் நடத்தப்பட்ட VBSஇல் 149 சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். CCMஇன் EduLight திட்டத்தின் கீழ் 5 மாணவர்கள் ஆதரவு பெறுகின்றனர்.*

*"UniqMentor" பயிற்சித் திட்டத்தின் மூலம் இணைய வழியாக இணைந்த 90 பேர் அடுத்த தலைமுறையை வழிநடத்திடும் ஆவிக்குரிய வழிகாட்டிகளாகப் பயிற்சி பெற்றனர். தமிழில் "UniqMentor" கையேடு தயாரித்து வெளியிடப்பட்டது. CCMஇன் 2025க்கான காலண்டர் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது. இந்த மடலை எழுதும்போது, அநேக சுவிசேஷக் கூட்டங்கள் கிறிஸ்துமஸ் காலங்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.*

*19 முழுநேர ஊழியர்களையும், சில தன்னார்வலர்களையுமே கொண்ட CCM குழுவின் மூலம் தேவன் செய்து வருகிற காரியங்கள் மகத்தானவை. இவற்றைப் பார்க்கும்போது, தேவன் தேசம் முழுவதற்குமான தன் திட்டங்களைச் செயல்படுத்துகிறார்; எங்களையும் அவ்வூழியத்திற்கென்று நம்பியுள்ளார் என்பது தெளிவு. கடைசி வரை உண்மையாய் நிலைத்திருக்க ஜெபியுங்கள்.*

*இப்புத்தாண்டில் புதிய தலைமுறையை ஆசீர்வதிக்க புதிய கிருபைகளுக்காய் மன்றாடுவோம். நம்மைச் சுற்றியுள்ளோர் தேவனை நம்மில் காண, நாம் தேவ அன்பால் நிறையப்படுவோம். "காலத்திற்கேற்ப தயாரா*

வோம்! கற்பாறையில் (இயேசுவில்) நங்கூரமிடுவோம்!” என்ற Youth For Christஇன் இலக்குரையை நினைவூட்டுகிறேன். இதையே CCMமும் செயல்படுத்த முயற்சிக்கிறது. புதிய தலைமுறையைக் கிறிஸ்துவுக்காய் ஆசீர்வதித்திட யாவரும் இணைந்து பணியாற்றுவோம்! வாரீர்!

**-D. ஜேசன், தேசிய ஒருங்கிணைப்பாளர், CCM**

## செயல்படும் தேவன்

**கர்த்தருடைய தாசனாகிய மோசே மரித்த பின்பு, கர்த்தர் மோசேயின் ஊழியக்காரனான நூனின் குமாரன் யோசுவாவை நோக்கி: என் தாசனாகிய மோசே மரித்துப் போனான்; இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள் (யோசு 1:1,2).**

நம் தேவன் எப்பொழுதும் செயல்படும் தேவன். அவர் நித்தியத்திற்கான அட்டவணையைக் கொண்டு செயல்படுகிறார். இந்த உலகத்தின் முடிவு நெருங்கும் காலத்தினுள் இருப்பதால் சில காரியங்களை வேகமாகச் செய்து முடிக்க விரும்புகிறார். அவருடைய திட்டத்திற்கும் நோக்கத்திற்கும் ஏற்ப, அவருக்காக விருப்பத்தோடு செயல்படும் மக்கள் அவருக்குத் தேவை. அநேக சமயங்களில் நாம் நமக்கென ஏற்படுத்திக் கொள்ளும் திட்டங்களும், ஆசைகளும், விருப்பங்களும் தேவ திட்டத்திற்குத் தடையாயுள்ளன. எனவே நாம் அவருடைய திட்டத்திற்கும் நோக்கத்திற்கும் இணங்கிச் செல்ல வேண்டும். அவருடைய திட்டத்திற்குக் கரம்கொடுத்து, நம் திட்டத்தைக் கைவிடும்போது நம் ஆவிக்குரிய வாழ்வு சிறப்படையும்.

நம் ஊழிய பாதையிலும்கூட, நம்முடைய சுயமான உணர்ச்சிபூர்வமான ஆசைகளும், திட்டங்களும் தேவ திட்டத்தை நாம் காணமுடியாதபடி நம் கண்களை மறைத்துவிடும். சில சமயங்களில் நம்முடைய திட்டங்களை நாம் தேவ திட்டம் எனத் தவறாக எண்ணிவிடுவோம். இந்த 2025ஆம் வருடத்திற்குள் நுழையும் நாம் நம்முடைய விருப்பங்கள், திட்டங்கள், உணர்ச்சிபூர்வமான ஆசைகள் யாவற்றையும் தேவ பாதத்தில் வைத்து, அவைகளைச் சீர்படுத்துவோம். மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசனத்தில், மோசே இறந்ததற்காக எந்த ஒரு சோகமான உணர்ச்சியும் காணப்படவில்லை. மாறாக தேவன் யோசுவாவை, அவருடைய ஆவிக்குரிய தலைவரின் மறைவிற்காக மனம்வருந்தச் சிறிது நேரம் கொடுத்தாலும், தம் மக்களை வழிநடத்தி முன்னேறிச் செல்லப் பணிக்கிறார். ஊழியத்தின் பாரங்கள் அடுத்த நிலைத் தலைவர்களுக்குக் கடத்தப்பட வேண்டும். ஏனெனில் ஊழியம் தொடர்ந்து செல்லவேண்டுமே! மக்கள் வழிநடத்தப்பட வேண்டுமே! தேவனின் திட்டங்கள் செய்து முடிக்கப்பட வேண்டுமே! தரிசனம் நிறைவேற்றப்பட வேண்டுமே! ஆவிக்குரிய தொடரோட்டம் தொடர வேண்டுமே! கடந்த காலங்களுக்காய் தேவனுக்கு நன்றி சொல்லிவிட்டு, புதிய கிருபைகளுக்காய், புது பெலத்திற்காய் தேவனை நோக்கி ஜெபித்து முன்னேற வேண்டும் நாம்!

சில சமயங்களில் நாம் கடந்த காலங்களிலேயே மூழ்கிவிடுகிறோம். பழைய இயல்புகள், தோல்விகள், எதிர்மறை அனுபவங்கள் இவை நம்மைப் பின்னோக்கி இழுக்கின்றன. உங்களைத் தடுப்பவை எவை? தகுதியற்றவன் என்ற எண்ணமா? வயதா? அனுபவக் குறைவா? தோல்வி பயமா? எதுவாயினும் இயேசுவின் சிலுவையண்டை கொண்டு வருவோம். அவர் யாவற்றையும் ஜெயமாய் மாற்ற வல்லவர்.

வேறு சிலரோ ஆவிக்குரிய வாழ்வில் “என்னால் இயலாது” என்ற வியாதியினால் பீடிக்கப்பட்டுள்ளனர். “எனக்கு வயதாகிவிட்டது”, “நான் பலவீனன்”, “என் உடல்நிலை மோசம்”, “என் மனைவி ஆதரவு கொடுக்கவில்லை”, “என்னால் பயணம் செய்ய முடியாது” இப்படி இன்னும் பல. என் பிரியரே! இந்த புலம்பல்களை நிறுத்துங்கள்! கிறிஸ்துவுக்காய் மரித்து, பரலோகம் சென்று, நித்தியத்தில் ஆனந்தமாய் தேவனைத் துதிப்பது எளிது. ஆனால் கிறிஸ்துவுக்காய் இவ்வுலகில் சாதிக்க வேண்டியுள்ளது அத்தனையும் இழந்துபோவோமே? இப்போது நாம் செய்ய வேண்டியதை வேறு எப்போது செய்வோம்? நித்தியத்தில் நம் பூமியின் ஆயுள் ஒரு நீர்க்குமிழி போன்றது. மீண்டும் உலகிற்கு திரும்பி வந்து இழப்பைச் சரிசெய்ய முடியாது.

**“இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து...”**

“இப்பொழுது” என்பது முக்கியமான சொல். அது “இன்றைய பொழுதைப்” பற்றியது. நாளையோ, அடுத்த ஆண்டோ இல்லை. இப்பொழுதே நாம் செயல்பட வேண்டும்! Now or Never! நாம் சும்மா இருக்க முடியாது. கிறிஸ்தவ வாழ்வில் நியூட்ரல் கியர் கிடையாது! நாம் முன்னேறுவோம் அல்லது பின்மாற்றமடைவோம். எனவே இனித் தாமதிக்க வேண்டாம். வேதத்தையும், டைரியையும் எடுத்துக் கொண்டு, இப்புது வருடத்தில் நாம் செய்ய வேண்டியது என்ன என்று தேவனிடம் கேட்போம். அவர் வழிநடத்துவார். தேவ திட்டத்தை நம் வாழ்வில் நிறைவேற்றுவோம்.!

தேவன் நமக்கு ஒரு புதிய தொடக்கத்தைத் தருவாராக! ஆமென்!

**-D. ஜேசன் பிரின்ஸ், மிஷனரி, பஞ்சாப்**

## பணித்தள எக்காளம் - 3

"ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்" *(1 கொரி 1:27).*




பெயரளவிலான கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த தாலும், தந்தை நாத்திகராக இருந்ததாலும், ராஜா சுப்ரமணிக்கு கிறிஸ்துவை அறிந்துகொள்ளும் வாய்ப்பு அதிகம் இல்லை. வேதத்தை அவர் வாசித்ததில்லை. ஜெபிக்கவும் தெரியாது. ஆவிக்குரிய வாழ்க்கையைப் போன்றே அவருடைய கல்வியும் இருந்தது. 6 மற்றும் 7ஆம் வகுப்புகளில் சரியாகப் படிக்காததால், பள்ளியை விட்டு வெளியேற்றப்பட்டார். இருப்பினும் தேவ கிருபையால் B.A., BEd.,ஐ முடித்தார்.

இவரது கல்லூரி நாட்களில் ஒரு வாலிபர் கிறிஸ்தவக் குழுவில் (Youth Boys Christian Fellowship) அறிமுகமானபோது அவரது வாழ்வு மாறத் தொடங்கியது. வேதத்தை வாசிக்கவும், ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறவும் ஆரம்பித்தார். அப்போது தேவன் மத்தேயு 9:37 மற்றும் மத்தேயு 16:24இன் மூலம் அவருடன் பேசி, தன்னை முழுநேரப் பணிக்கு அழைப்பதாக உணர்ந்தார். ஆனால் அந்த அழைப்பிற்கு ராஜா தன்னை அர்ப்பணிக்கத் தயாராக இல்லை. தனது ஆசிரியர் பணியைத் தொடர்ந்தார். தன்னை வெளியேற்றிய பள்ளியிலேயே 7ஆம் வகுப்பிற்கு பாடம் நடத்தினார். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், சுரங்கத் தொழிலில் ஈடுபட்டார். சிலிக்கா சுரங்கங்களின் வறட்சியைப்போல ராஜாவின் ஆவிக்குரிய வாழ்வும் வறண்டுபோனது.

கிருபையின் தேவனோ ராஜாவிற்கு மீண்டும் ஒரு வாய்ப்பினைக் கொடுத்தார். 2015ஆம் ஆண்டு ராஜாதி ராஜாவின் அழைப்பிற்கு அடிபணிந்து, ராஜா மத்தியப்பிரதேசத்தின் ஜபல்பூரில் மிஷனரியாக தன் ஊழியத்தைத் துவங்கினார். 2016ஆம் ஆண்டு தேவன் அபர்ணாவை வாழ்க்கைத் துணையாகக் கொடுத்தார். அவர்கள் ஹைதராபாத்திற்கு இடம்பெயர்ந்து கடந்த 5 ஆண்டுகளாக வாலிபர் மத்தியில் ஊழியம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு எல்சா ஜெஸ்லின் (7 வயது) மற்றும் எலினா ரோஹி (2 1/2 வயது) என இரண்டு மகள்கள் உள்ளனர்.

வாலிபர் கூட்டங்கள், இணையதளம் வாயிலாக நம்பிக்கை குழுக்கள் மற்றும் ஆலோசனை சேவைகளின் மூலம் தேவன் ஹைதராபாத்தில் உள்ள இளைஞர்களை ஆசீர்வதிக்க இவர்களைப் பயன்படுத்துகிறார். வாலிபர் ஆவிக்குரிய ஆலோசனை பெற ஒரு இலக்கு மையத்தை (Focus Centre) உருவாக்கியுள்ளனர். அபர்ணாவும், ராஜாவிற்கு ஊழியத்தில்மிகவும் ஆதரவாகச் செயல்பட்டு, சிறுவர் ஊழியத்தில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார். அவர்களை அழைத்த ஆண்டவர் இறுதிவரை உண்மையாக ஊழியம் செய்ய பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக!

## மிஷனரிகளுக்காக ஜெபிப்பது எப்படி?

**"மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள்; அவன் தன் கையைத் தாழ விடுகையில், அமலேக்கு மேற்கொண்டான்" *(யாத் 17:11).***

எகிப்திலிருந்து வெளியேறியவுடன் இஸ்ரவேலருக்கும் அமலேக்கியருக்கும் நடந்த யுத்தம் (யாத் 17:8-16) ஊழியத்திற்கான ஜெபத்தின் முக்கியத்துவத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இறுதி காலங்களில் வாழும் நமக்கு யோசுவாக்களோடு, முன்னிலையில் போரிடும் மனிதர்களும் தேவை. போரில் அவர்களுடைய போர்த்திறன் மோசே, ஆரோன், ஊர் என்பவர்களின் ஜெப உதவியையே சார்ந்திருந்தது. அப்படியே நாமும் CCMஇன் மிஷனரிகளுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். அவர்களுக்காக எவ்வாறு ஜெபிப்பது என்பதற்கான வழிகாட்டும் முயற்சியாக **"SPOTLIGHT"** என்ற முறையை அறிமுகப்படுத்துகிறோம்.

**S** - Spiritual Life *(ஆவிக்குரிய வாழ்க்கை)* - மிஷனரிகள் எப்போதும் தேவனோடு நெருங்கி ஜீவிக்க வேண்டும். தினமும் தேவனின் பாதத்தில் அமர்ந்து தியானித்து, அவர் சத்தம் கேட்டு, சித்தம் செய்ய வேண்டும். ஆவியின் கனிகளாலும், வரங்களாலும் நிறைந்திருக்க வேண்டும்.

**P** - Perseverance *(விடா முயற்சி)* - எத்தனை இடர்பாடுகள் வந்தாலும், தேவன் அவர்களை அழைத்த அழைப்பில் உறுதியாக நின்று ஊழியம் செய்ய வேண்டும்.

**O** - Oneness in Mind *(ஒருமனப்பாடு)* - மிஷனரிகள் தங்கள் வாழ்க்கைத் துணையுடனும் மற்ற குழு உறுப்பினர்களுடனும் ஒருமனப்பாட்டுடன் செயல்பட வேண்டும். அவர்கள் சாத்தானின் தந்திரங்களைக் கண்டுகொண்டு, அதற்கு இடங்கொடாமல் ஒருவரையொருவர் தாங்க வேண்டும்.

**T** - Testimony ***(சாட்சியுள்ள வாழ்க்கை)*** - மிஷனரிகள் எங்கே வாழ்ந்தாலும், முன்னுதாரணமான வாழ்க்கை வாழ வேண்டும். மிஷனரிகளின் பிள்ளைகளும் சாட்சியுள்ள, வாழ்வு வாழ வேண்டும்.

**L** - Language ***(மொழி)*** - எந்த இடத்திற்கு அழைக்கப்பட்டாலும் அந்த இடத்தின் மொழியைக் கற்றுக்கொண்டு சரளமாக தாய்மொழிப்போல பேசவும், எழுதவும், தேவையான ஞானத்தை தேவன் தர வேண்டும்.

**I** - Insight ***(நுண்ணறிவு)*** - தேவ ஞானத்தோடு எந்தப் பிரச்சனையாயினும் அதன் மூலக்காரணத்தைப் புரிந்துகொண்டு, காண்பவற்றிற்கேற்ப முடிவு செய்யாமல், சரியான முடிவுகளை எடுக்க வேண்டும்.

**G** - Gospel ***(சுவிசேஷம்)*** - அதிகாரத்தோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்திட தேவன் திறந்த வாசல்களைத் தரவேண்டும். பாவக்கட்டிலிருந்து அநேகர் விடுதலையாக்கப்பட வேண்டும்.

**H** - Health ***(உடல்நலம்)*** - மிஷனரிகளின் உடல்நலம் பாதுகாக்கப்பட வேண்டும். பணித்தளப் பகுதிகளில் பரவும் நோய்கள், மன அழுத்தங்கள், சோர்வுகள், விபத்துகள் போன்றவற்றிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

**T** - Trials ***(சோதனைகள்)*** - மிஷனரிகள், கிறிஸ்துவுக்காக சோதனைகளையும், துன்பங்களையும், உபத்திரவங்களையும், கஷ்டங்களையும் சகித்து, தங்கள் கடைசி மூச்சுவரை உறுதியாக நிற்க பெலப்பட வேண்டும்.

*இப்படியாக நாம் முன்னணியில் நிற்கும் மிஷனரிகளுக்காக அனுதினமும் தவறாமல் ஜெபித்து வரும்போது, அதன் முடிவுகள் நம்மை ஆச்சரியப்படுத்தும்! எதிரியின் முகாமைக் கொள்ளையடித்து, ஆத்துமாக்களை தேவனுக்காய்ச் சேகரிக்கும் வெற்றிச் செய்திகளை நாம் கேட்கத் தொடங்குவோம்! ஒருவேளை இவ்வுலகில் நமக்கு அந்த முடிவுகள் சரியாகத் தெரியாவிட்டாலும், நம் ஜெபங்கள் மூலம் தேவராஜ்யத்தில் எத்தனைக் காரியங்கள் நடந்தன என்று பரலோகம் நம்மை ஆச்சரியப்படுத்தும்!*

- Dr. **ஜாண் மெல்பின், மிஷனரி,** CCM

## இறுதி அழைப்பின் ஊழியரின் நடபடிகள்

**துதிக்க:**

- CCMஇன் மீடியா குழுவினர் இருவர், திரைப்பட உருவாக்கம் குறித்த பயிற்சியில் பங்கேற்றதற்காக. அடுத்த தலைமுறையினருக்கானத் தரமான கிறிஸ்தவ தரவுகளை உருவாக்க தேவன் அவர்களைப் பயன்படுத்துவதற்காக.
- ஒடிசாவில் உள்ள ஒரு பள்ளியில் தேவன் கொடுத்த திறந்த வாசலுக்காக.
- பஞ்சாப் - குருதாஸ்பூரில் முதன்முறையாக நடைபெற்ற வாலிபர் கூடுகையில் 80 பேர் பங்குபெற்று, வார்த்தையிலும் ஆவியிலும் பலப்படுத்தப்பட்டதற்காக.
- பஞ்சாப் - அமிர்தசரஸில் நடைபெற்ற வாலிபர் நிகழ்ச்சியில் 80 வாலிபர்கள் வெகுதூரம் பயணித்து வந்து பங்குபெற்றனர். தேவன் அவர்களை ஆவிக்குரிய வரங்களால் நிரப்பினதற்காக.
- தேவ கிருபையால் UniqMentor என்ற இணைய வழி ஆவிக்குரிய வழிகாட்டிகளுக்கான பயிற்சித் திட்டம் சிறப்பாக முடிந்ததற்காக.

CCMஇன் பல்வேறு மிஷனரி பணித்தளங்களில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி மூலம் தேவனின் அன்பைப் பகிர்ந்துகொள்ளக் கிடைத்த வாய்ப்பிற்காக.

**ஜெபிக்க:**

- 2025 ஜனவரி 13-16 தேதிகளில் வாலிபருக்கான சிறப்பு முகாம் “யாஷா”விற்காக.
- UniqMentor பயிற்சியில் பங்கேற்றோர் தாங்கள் கற்றுக்கொண்டதைப் பயன்படுத்தவும், தேவனின் கரத்தில் பயனுள்ள பாத்திரங்களாய்ச் செயல்படவும்.
- ஜனவரி 1 முதல் 21 வரை விடுதலை சவாலில் பங்கேற்போர், தேவ கிருபையால் ஒரு தவறான பழக்கத்தை விடுத்து, ஒரு நல்ல பழக்கத்தைப் பெற்றுக்கொள்ள
- தெலுங்கானா - ஹைதராபாத்தில் தொடங்க உள்ள Keyboard வகுப்புகளுக்காக.
- ஒடிசாவில் ஒரு மருத்துவமனை கட்ட நிலம் கிடைக்க.

### கிறிஸ்துமஸ் அன்பளிப்பிற்கு நன்றி

CCMஇன் மிஷனரிகள் உங்கள் அன்பின் கிறிஸ்துமஸ் வெகுமதிகளுக்காக நன்றி கூறுகிறார்கள். இந்த உன்னதப் பணிக்கு உறுதுணையாக இருக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள். சர்வவல்ல தேவன் உங்களை ஆசீர்வதித்து, அநேகருக்கு ஆசீர்வாதமாய்ப் பயன்படுத்துவாராக!


Contact Details:
**Mobile: +91 6381456683**
**Email: clarioncallrt@gmail.com**
**www.clarioncallmission.org**


Bank Details:
Clarion Call Religious Trust
**SBI** Account No. **42630087198**
Branch: **Shastri Nagar, Chennai**
IFSC: **SBIN0007106**

UPI ID:
clarioncall@sbi


Published from: 1752, LIG 2, 3rd Main Road, MMDA, Mathur, Manali, Chennai - 600 068